1986 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்த எக்ஸ்-ரே படங்கள் நோயாளிகளுக்குத் தேவைப்படும் என்ற நிலையிருந்தால் அதை என்ன விலைக்குக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி அரசு விரைவிலே ஆராய்ந்து முடிவெடுக்கும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்துவம் பார்ப்பதற்கு மொத்த வருமானம் ரூ. 300 என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை உயர்த்தி, ரூ. 600 என்று நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது எக்ஸ்-ரேயைப் பற்றியது. மற்றைய விவரங்கள் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம் கோனாபட்டு கிராமத்தில் மருத்துவமனை.

82—(*வினா எண் 5016) திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கோனாபட்டு கிராமத்தில் மருத்துவமனை கட்டுவதற்கு மக்கள் பங்கு தொகை ரூபாய் 50,000 செலுத்தப்பட்டும் மருத்துவமனை கட்டப்படாததற்கான காரணம் என்ன?

(ஆ) மருத்துவமனை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): அரசு கிராம மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அவற்றில் ஒன்றான புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கோனாபட்டு கிராம மருந்தகம், ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. மேற்படி மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோனாபட்டு கிராமத்திலே மருத்துவமனை வேண்டுமென்று கேட்டு, 12–12–1975-லேயே கிராம மக்கள் ரூ. 50,000 கட்டியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 11 வருஷம் ஆகிறது. 24–11–1978-ல் மருத்துவமனை கட்டும் திட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. 8 வருஷம் ஆகிறது. அந்த மருத்துவமனைக் கட்டிடத்திற்கு 2 ஏக்கர் 4 சென்ட் இடமும் 19–3–1978-லே முடிவு செய்யப்பட்டது. ஆனால், இதுவரையில் அங்கே மருத்துவமனை கட்டப்படவில்லை. அதைக் கருத்திலே

கொண்டு உடனடியாக மருத்துவமனை வேலையைத் தொடங்க வேண்டுமென அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் கோனாபட்டு கிராமத்தில் அரசு மருத்துவமனை தொடங்கப்படுவதற்காக அரசு ஆணை எண் 2056, சுகாதாரம், 24-11-1978 ஆம் நாளில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல 50,000 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். ஆனால் 2.04 ஏக்கர் நிலம்தான் கொடுத்திருக்கிறார்கள். அரசு மருத்துவமனை தொடங்குவதற்கு 5 ஏக்கர் நிலமும் 50,000 ரூபாயும் கொடுக்க வேண்டும். 5 ஏக்கர் நிலமும் 50,000 ரூபாயும் கொடுத்திருக்கிற பல ஊர்களிலே கூட அரசின் நிதிநிலையை உத்தேசித்து, இன்னும் மருத்துவமனை தொடங்கப்படவில்லை. நிதிநிலயைப் பொறுத்து ஒவ்வொன்றாக செயல்படுத்தப்படும்.

திரு. த. புஷ்பராசு : தலைவரவர்களே, 5 ஏக்கர் நிலம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 5 ஏக்கர் நிலத்தையும் விரைவிலே கொடுக்க அந்த கிராம மக்கள் மூலம் நடவடிக்கை எடுக்கிறேன். கிராமப்புறமாக இருக்கிற அந்தப் பகுதியிலே வேறு மருத்துவமனை அருகில் இல்லாத காரணத்தால், அதைக் கருத்திற்கொண்டு விரைவில் மருத்துவமனைக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 5 ஏக்கர் நிலமும் 50,000 ரூபாயும் கட்டிய பல இடங்களிலே கூட இன்னும் கட்டிடம் கட்டப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 5 ஏக்கர் நிலமும் தந்தால் வரிசைப்படி கட்டப்படும்போது, இதுவும் சேர்த்துக்கொள்ளப்படும்.

வெளிநாட்டில் தடை செய்யப்பட்ட மருந்துகள்.

83—(*வினா எண் 7995) டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டில் தடை செய்யப்பட்டுள்ள மருந்துகள் தமிழ்நாட்டில் உபயோகப்படுத்தப்படுகின்றனவா ?

(ஆ) என்னென்ன மருந்துகள் உபயோகப்படுத்தப் படுகின்றன ?

(இ) அவைகளை தமிழ்நாட்டில் தடை செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?